රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils & Local Government

ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division

"නිල මැදුර", ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
"Nila Madura", Elvitigala Mawatha, Colombo 05.

TP : +94 112 050 450
Fax : +94 112 369 971
Email: info@moha.gov.lk
Web : www.moha.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: HA/3/7/28-5

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2024.04.

சகல மாவட்டச் செயலாளர்கள் /அரசாங்க அதிபர்கள்
சகல பிரதேச செயலாளர்கள்,

**<u>நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தல் - 2025</u>**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை ஒழுங்கு விதி 1 ஆம் வகுதியின் XVIII ஆம் அத்தியாயத்தின் நடைமுறை ஒழுங்கின் படியும், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படியும் 2025 ஆம் ஆண்டின்றான கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

02. 2024.12.31 ஆந் திகதிக்கு ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பிரதேச செயலகப் பிரிவில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள் கட்டாய இடமாற்றத்துக்கு உட்படுதல் வேண்டும். கிராம உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது அவர்கள் பதிற்கடமையாற்றும் இடங்களுக்கு இடமாற்றத்தை மேற்கொள்ளாதிருக்க வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படும் இடமாற்றக் கட்டளைகளை அமைச்சுக்கு (இணைப்பு 04 ) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. 2024 வருடாந்த இடமாற்றக் கட்டளை, கணக்கெடுப்பில் பட்டியலிடப்பட்டுள்ள கடமைகள் மற்றும் தேர்தல் வாக்கெடுப்புப் பட்டியலின் மீள் திருத்தக் கடமை நடவடிக்கைகள் காரணமாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் வேண்டுகோளின் படி 2024.03.01 ஆந் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்த வருடத்திற்கு மாத்திரம் இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணை பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஏப்ரல் மாதம் 20 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களை கோருவது தொடர்பான அறிவித்தலை வெளியிடல். |

| | |
|---|---|
| ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் குழுவைத் தாபித்தல். |
| மே மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் | குறித்த அதிகாரிக்கு வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் |
| ஜூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | குறித்த அதிகாரிக்கு கிடைக்கப்பெறும் வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பப்படிவங்களை உரிய வருடாந்த இடமாற்றக் குழுவிடம் ஒப்படைத்தல். |
| ஜூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் குழுவின் இடமாற்ற முன்மொழிவுகளை குறித்த அதிகாரிக்கு எழுத்தில் கையளித்தல் |
| ஜூலை மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான அறிவித்தலை வெளியிடல் |
| ஜூலை மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற மீளாய்வுக் குழுவை நியமனம் செய்தல் |
| ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்ற முன்மொழிவு மீளாய்வுக் குழுவினால் முன்மொழியப்பட்ட வருடாந்த இடமாற்றம் தொடர்பான தனது எழுத்து மூல பரிந்துரையை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைத்தல் மற்றும் வெற்றிடப் பட்டியலையும் இடமாற்றக் கட்டளையையும் (இணைப்பு 01 இன் படி) அமைச்சுக்கு அனுப்பி வைத்தல். |
| ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் | வருடாந்த இடமாற்றக் கட்டளையை வெளியிடல் |
| ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் | வருடாந்த இடமாற்றக் கட்டளை பயன்வலுப்பெறல். |

04. அதன்படி, 2025.01.01 ஆந் திகதி முதல் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச செயலகப் பிரிவினுள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்ள பிரதேச செயலாளரினாலும், மாவட்டத்தினுள் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே இடமாற்றங்களை மேற்கொள்வதாயின் மாவட்ட செயலாளரினாலும் விண்ணப்பங்களை கோருவதற்கும், அவ்விடமாற்றங்களை அவதானிப்பதற்காக இடமாற்றச் சபை உரியவகையில் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட செயலகப் பிரிவு மட்டத்தில் நியமனங்களைச் செய்யவும்

இச்சபைகளின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இடமாற்றங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

05. மேலும், பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளை தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டினை மாவட்ட மேன்முறையீட்டுச் சபைக்கும், மாவட்டச் செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வருடாந்த இடமாற்றக் கட்டளைகள் தொடர்பில் திருப்தியடையாத ஒருவர் அது குறித்த மேன்முறையீட்டை இந்த அமைச்சின் மேன்முறையீட்டுச் சபைக்கும் தமது நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் கூடிய இடமாற்றக் கட்டளை வெளியிடப்பட்டு 14 நாட்களினுள் இணைப்பு 02 இன் படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்துதல் வேண்டும். குறிப்பிட்ட திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட முறைமைகளுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு கவனமும் செலுத்தப்பட மாட்டாது.

06. மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்களுக்கு விண்ணப்பிக்கும் கிராம உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு 03 இன் படி தயாரித்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் பரிந்துரையுடன் இவ்வமைச்சுக்கு 2024.06.30 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட மாதிரிப்படிவத்துக்குப் புறம்பாக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

07. 2025 ஆம் ஆண்டில் மாவட்டங்களுக்கிடையிலான வருடாந்த இடமாற்றங்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் குறித்து கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது கடமைத் தேவையின் அடிப்படையில் அல்லது பிற விசேட காரணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்படும்.

08. நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றம் (கிராம உத்தியோகத்தர் அதிஉயர் தரம்) மாவட்டங்களுக்கிடையில் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையில் இடமாற்றங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை (இணைப்பு 01) உரிய திகதிக்கு முன்னர் மாவட்டச் செயலாளர் மற்றும் மாவட்டச் செயலாளர் ஊடாக இந்த அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரதேச செயலகப் பிரிவொன்றில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் இடமாற்றங்களைக் கோராத போதிலும் இடமாற்றக் கொள்கையின்

ஏற்பாடுகளுக்கமைய மற்றொரு பிரதேச செயலகப் பிரிவுக்கு இடமாற்றம் பெறுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்கள்.

2025 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய விதம் குறித்த அவதானங்கள் மற்றும் பரிந்துரைகள் காணப்படின் அப்பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளுடன் இவ்விண்ணப்பத்தை உரிய திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு மாவட்டச் செயலாளர் ஊடாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

09. மேலும், 2024.12.31 ஆந் திகதிக்கு பிரதேச செயலகமொன்றில் 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள நிர்வாக கிராம உத்தியோகத்தர்களின் அறிக்கையொன்று இத்துடன் (இணைப்பு 04) இன் பிரகாரம் 2024.06.01 ஆந் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்ப சகல மாவட்டச் செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. இவ்விண்ணப்பங்கள் கோரப்படுவது தொடர்பாக சகல கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக கிராம உத்தியோகத்தர்களுக்கு அறியப்படுத்துமாறும் மாவட்டத்தினுள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவினுள் இடமாற்றக் கொள்கையின் கீழ் 2024 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள சகல இடமாற்றங்களும் 2025.01.01 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் சகல இடமாற்றங்களையும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதற்கு மேலதிகமாக வருடாந்த இடமாற்றக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு செயற்படுமாறு அறியத்தருகின்றேன்.

11. மேலும், புதிய கிராம உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் நடவடிக்கை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், பிரதேச செயலகங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அப்புதிய ஆட்சேர்ப்பின் மூலம் பூர்த்தி செய்யப்படவுள்ளார்கள் என்பதால், பிரதேச செயலகங்களுக்கிடையே கிராம உத்தியோகத்தர்களின் இடமற்றங்கள், புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முடிவடையும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்படும் என மேலும் தயவுடன் அறியத்தருகிறேன்.

எச்.எம். நந்தசேன
மேலதிகச் செயலாளர்
(உள்நாட்டலுவல்கள்)

ஒப்பம் :பிரதீப் யசரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

இணைப்பு 01

கிராம உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2024

மாவட்டம் :-

பிரதேச செயலகப் பிரிவு :-

| தொடரிலக்கம் | கிராம உத்தியோகத்தரின் பெயர் | தற்போதைய கிராம உத்தியோகத்தர் பிரிவு | தற்போதைய கிராம உத்தியோகத்தர் பிரிவில் இணைக்கப்பட்ட திகதி | **2024.12.31** ஆந் திகதிக்கு தற்போதைய கிராம உத்தியோகத்தர் பிரிவில் சேவையாற்றிய காலப்பகுதி | **2025** வருடாந்த இடமாற்றக் கட்டளை | இடமாற்றக் கட்டளை வழங்கப்படாதிருப்பின் அதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

## வருடாந்த இடமாற்றத் தீர்மானங்கள் தொடர்பில் அமைச்சுக்கு மேன்முறையீடுகளை சமர்ப்பித்தல்

இணைப்பு 02

| அ. தனிப்பட்ட தகவல்கள் | | | | |
|---|---|---|---|---|
| 1 | முதலெழுத்துக்களுடன் பெயர்- | | | |
| 2 | பதவி மற்றும் வகுப்பு - | | | |
| 3 | பிறந்த திகதி - | வரு - | மாதம் - | திகதி - |
| 4 | வயது (20.. 12.31 ஆந் திகதிக்கு) - | வரு - | மாதம் - | திகதி - |
| 5 | தேசிய அடையாள அட்டை இலக்கம் - | | | |
| 6 | பால் (ஆண்/பெண்) - | | | |
| 7 | நிரந்தர முகவரி - | | | |
| 8 | தற்போதைய வதிவிட முகவரி - | | | |
| 9 | தொலைபேசி இலக்கம் - | | | |
| 10 | விவாகமானவர் / விவாகமாகாதவர் என்பது பற்றி - | | | |
| | 1. வாழ்க்கைத் துணையின் பெயர் - | | | |
| | 2. வாழ்க்கைத் துணையின் தொழில் மற்றும் சேவை நிலையம் - | | | |
| | 3. பிள்ளைகளின் எண்ணிக்கை - | | | |
| | 4. அவர்களின் வயது - | | | |

ஆ. சேவைத் தகவல்

| | | |
|---|---|---|
| 11 | பதவியில் நியமனம் பெற்ற திகதி - | |
| 12 | தற்போதைய சேவை நிலையம் - | |
| 13 | தற்போதைய சேவை நிலையத்திற்கு அறிக்கையிட்ட திகதி - | |
| 14 | தற்போதைய சேவை நிலையத்தில் சேவைக் காலம் ( 20.............12.31ஆந் திகதிக்கு) - | |

15 முந்தைய சேவை விபரம் -

| முந்தைய சேவை நிலையம் | சேவைக் காலம் | |
|---|---|---|
| | இலிருந்து ( வரு.மாதம் திகதி) | ஆம் ஆண்டு வரை ( வரு.மாதம் திகதி) |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

இ. வருடாந்த இடமாற்றக் கோரிக்கை தொடர்பிலான தகவல்

| | வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார் / இல்லை | இடமாற்றத்திற்கு விண்ணப்பித்திருப்பின் விண்ணப்பித்துள்ள சேவை நிலையம் |
|---|---|---|
| 16 | | 1 |
| | | 2 |
| | | 3 |

17 வருடாந்த இடமாற்றம் கிடைத்திருப்பின் அச்சேவை நிலையம் -
(மாவட்ட,பிரதேச செயலாளர் பிரிவு,கிராம உத்தியோகத்தர் பிரிவு ஆகிய சகல விபரங்களையும் குறிப்பிடவும்)

**சுய விருப்பப்படி மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றங்களைப் பெறுவதற்கு எதிர்பார்க்கும் உத்தியோத்தர்கள் மாத்திரம் இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.**

**நிர்வாக கிராம உத்தியோகத்தர் / கிராம உத்தியோகத்தர் சேவையில் வருடாந்த இடமாற்றங்களைப் ( மாவட்டங்களுக்கிடையே) பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்**

| | | | |
|---|---|---|---|
| பதவி மற்றும் தரம் | | குறிப்பிலக்கம் (அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) | |

| | |
|---|---|
| 01. I. உத்தியோகத்தரின் முழுப் பெயர் :- | |
| II. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- | |
| III. உத்தியோகத்தரின் நிரந்தர முகவரி :- ( தனிப்பட்ட முகவரி) | |
| • அந்த முகவரி உட்படுவது<br>i. மாவட்டம் :-<br>ii. பிரதேச செயலகம் :- | |
| IV. உத்தியோகத்தர் தற்போது வதியும் முகவரி :-<br>V. தொலைபேசி இலக்கம் :- | |
| 02. தற்சமயம் சேவையாற்றுவது<br>I. மாவட்டம் :-<br>II பிரதேச செயலகம் :-<br>III. கிராம உத்தியோகத்தர் பிரிவு :- | |
| 03. I. பிறந்த திகதி :- வரு........மாதம..... திகதி........ | II. வயது :- ( 20........12.31 ஆந் திகதிக்கு வரு......மாதம்.... திகதி<br>III. ஆண் / பெண் நிலை :- |
| 04. I. கிராம உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :- | |

| | |
|---|---|
| II. மொழி மூலம் : -<br>III. நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : -<br>IV. அத்தரத்துக்கு உட்பட்ட திகதி : - | |
| 05. I. உத்தியோகத்தர் விவாகமானவரா? அது பற்றி : -<br>II. பிள்ளைகளின் எண்ணிக்கையும் அவர்களின் வயதும் : -<br>III. வாழ்க்கைத் துணையின் பதவியும் சேவை நிலையமும் : -<br>V. பதவி : - | |
| 06. 'அ' இறுதி 05 வருடங்களினுள் சேவை விபரம் | |

| இலிருந்து ( வரு./மாதம்/ திகதி) | வரை ( வரு./மாதம்/ திகதி) | மொத்த காலம் ( வரு./மாதம்/ திகதி) | மாவட்டம் | பிரதேச செயலகம் | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

'ஆ' உத்தியோகத்தர் இடமாற்றம் பெறுவதற்கு அவசியப்படும் மாவட்டம் மற்றும் பிரதேச செயலகம் ( விருப்ப ஒழுங்கின் படி பிரதேச செயலகங்கள் 03 இனைக் குறிப்பிடுவது கட்டாயமானதாகும்.)

| மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|
| 1 | 1 |
| 2 | 2 |
| 3 | 3 |

07. விண்ணப்பிப்பதற்கான காரணம்

I.

II.

III.

08. குறிப்பிடுவதற்கு ஏதேனும் காரணங்கள் இருப்பின் : -

09. மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது எனவும் சரியானது எனவும் இதனால் சான்று பகர்கின்றேன். என்னால் மேற்கூறப்பட்டுள்ள தகவல்கள் போலியானது

என நிரூபிக்கப்பட்டால் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியும் என நானறிவேன்.

.................... ....................

திகதி உத்தியோகத்தரின் ஒப்பம்

10. பிரதேச செயலாளரின் பரிந்துரை

மாவட்டச் செயலாளர்

..............................................

உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படாத உத்தியோகத்தர் எனவும், அவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது / திருப்தியற்றது எனவும் பொருத்தமான பதிலாள் ஒருவருடன் / இன்றி / பின்னர் பெற்றுத் தரும் அடிப்படையில் இடமாற்றத்திற்காக உத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / முடியாது. விண்ணப்பப்படிவம் சிபாரிசு செய்யப்படும் / செய்யப்படுவதில்லை.

.................... ....................

திகதி பிரதேச செயலாளர்

11. மாவட்ட செயலாளரின் பரிந்துரை

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை / ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இடமாற்றும் வழங்குவது தடையில்லை / தடையாக உள்ளது.

அதன்படி, பொருத்தமான பதிலாள் ஒருவருடன் / இன்றி / பின்னர் பெற்றுத் தரும் அடிப்படையில் இடமாற்றத்திற்காக உத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / முடியாது. விண்ணப்பப்படிவம் சிபாரிசு செய்யப்படும் / செய்யப்படுவதில்லை.

.................... ....................

திகதி மாவட்ட செயலாளர்

உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தகவல் உண்மையானது எனவும், உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது / திருப்தியற்றது எனவும் பொருத்தமான பதிலாளுடன் / இன்றி / பின்னர் தரப்படும் அடிப்படையில் இடமாற்றத்திற்காக உத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / முடியாது. வருடாந்த இடமாற்றம் தொடர்பில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டை பரிந்துரைக்கிறேன் / பரிந்துரைக்கவில்லை.

.......................................

.......................................

திகதி

மாவட்டச் செயலாளர்

18 மேன்முறையீட்டுக் குழுவுக்கு கிடைத்த விண்ணங்கள் தொடர்பான தகவல் -

| | (உரிய கூட்டினுள் (√) என்ற அடையாளமிடவும்.) | | அவ்வாறு விண்ணப்பித்ததற்கான காரணம் மற்றும் கோரிய சேவை நிலையம் |
|---|---|---|---|
| * | இடமாற்றத்தை இரத்துச் செய்தல் | | |
| * | இடமாற்றத்தை திருத்தியமைத்தல் | | |
| * | புதிய இடமாற்றத்தைப் பெறுதல் | | |

19 மாவட்ட மேன்முறையீட்டுச் சபையின் தீர்மானம் -

20 மாவட்ட மேன்முறையீட்டுச் சபைக்கு எதிராக அமைச்சின் மேன்முறையீட்டுச் சபையிடம் மேன்முறையீடு செய்வதற்கான காரணம் -

21 அமைச்சின் மேன்முறையீட்டுச் சபையிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நிவாரணம் -

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதியளிக்கிறேன்.

திகதி - ஒப்பம்

22 பிரதேச செயலாளரின் பரிந்துரை -

மாவட்டச் செயலாளர்.

.......................................

உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள தகவல் உண்மையானது எனவும், உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை எனவும் அவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது / திருப்தியற்றது எனவும் பொருத்தமான பதிலாளுடன் / இன்றி / பின்னர் தரப்படும் என்ற அடிப்படையில் இடமாற்றத்திற்காக உத்தியோகத்தரை விடுவிக்க முடியும் / முடியாது. வருடாந்த இடமாற்றப் தொடர்பில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டை பரிந்துரைக்கிறேன் / பரிந்துரைக்கவில்லை.

.......................................

.......................................

திகதி பிரதேச செயலாளர்

23 மாவட்டச் செயலாளரின் பரிந்துரை -

செயலாளர்,

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2024.12.31 ஆந் திகதிக்கு 05 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள சகல நிர்வாக கிராம உத்தியோகத்தர்களினதும் விபரம்

இணைப்பு 04

| தொடரிலக்கம் | பிரதேச செயலகம் | உத்தியோகத்தரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | பிறந்த திகதி | | | தற்போதைய சேவை நிலையத்திற்கு அறிக்கையிட்ட திகதி | | | தொலை பேசி இலக்கம் | தற்போதைய வதிவிட முகவரி | முந்தைய சேவை நிலையம் | வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பம் கோரியுள்ளீரா? | விண்ணப்பிக்காதுவிடின் இடமாற்றம் கிடைக்கப் பெற்றால் சேவையாற்ற விரும்பும் சேவை 03 நிலையங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வரு. | மாதம் | திகதி | வரு. | மாதம் | திகதி | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

மாவட்டம் :-